# சத்தியம்

## நாம் செய்த சாதனைகள் :-

- செங்கல்பட்டில் உள்ள போகர் பிரமிடு தியான மையத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் புதிய ஆன்மிக ஆர்வலர்களுடன் 33 க்கும் மேற்பட்ட "சத்ய தரிசனம்" வகுப்புகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.
- சத்ய தரிசனத்தில் கலந்து கொள்ளும் அனைத்து தியானிகளுக்கும் ஒவ்வொரு சனிக்கிழமையும் அன்னதானம் வழங்கப்பட்டது.
- பௌர்ணமி இசை தியான வகுப்புகள் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படுகின்றன.
- "இசை தியான யக்னம்-3" நிகழ்வு 24 ஆகஸ்ட் 2025 அன்று செங்கல்பட்டில் நடைபெற்றது. இதில் 200 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.
- ஜூலை-ஆகஸ்ட் 2025 இல் SJK நர்சரி & பிரைமரி ஸ்கூல், சாலவாக்கம் மாணவர்களுக்காக பாலாஜி டோன்தி மற்றும் சீனிவாசன் ஆகியோரால் 7 நாட்களும் தியான நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- ஆன்மிக விழிப்புணர்வு 365-தினசரி ஆன்லைன் தியானம் மற்றும் சத்சங்கத்தைக் கொண்ட பாலாஜி டோன்தி தலைமையிலான 482 தொடர்ச்சியான வகுப்புகள் நடத்தப்பட்டது.
- 7 நாள் தியான நிகழ்ச்சியான "தியான சப்தாஹம்" ஆகஸ்ட் 2025 இல் செங்கல்பட்டு மற்றும் அதைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களில் போகர் பிரமிட் தியான மையத்தின் குழுவால் நடத்தப்பட்டது.

### பத்ரிஜியின் செய்திகள்

## "பூமியில் உள்ள வாழ்க்கைக்கு வணக்கங்கள்!"

பூமி கிரகத்தின் மீது உள்ள வாழ்க்கை ..
பாதகமான சூழ்நிலைகள் ..
பயங்கரமான சூழ்நிலைகள் ..
வேதனையான சூழ்நிலைகள் ..
சவாலான சூழ்நிலைகள் ..
பரிதாபகரமான சூழ்நிலைகள் ..
துயரமான சூழ்நிலைகள் ..
மதிப்பு குறைவான சூழ்நிலைகள் ..
துறவிகளுக்கும் .. இல்லறவாசிகளுக்கும் ..
புண்ய ஆன்மாக்களுக்கும் ..
மற்றும் பாவ ஆன்மாக்களுக்கும் ..
அவமானம், ஒற்றுமையின்மை, தோல்வி,
தனிமை, விரக்தி, நம்பிக்கையின்மை ..
போன்ற கசப்பான அனுபவங்கள்
அனைத்தையும் அனைவருக்கும்
சமமாக வழங்குகின்றது!

அதனால்தான் இயேசு கிறிஸ்து கூட ..
"ஓ பிதாவே/கடவுளே!
ஏன் என்னைக் கைவிட்டீர்கள்?!"
என்று கூக்குரல் எழுப்பினார்!

அதேபோல், பூமி கிரகத்தின் மீது உள்ள வாழ்க்கை ..
சாதகமான சூழ்நிலைகள் ..
மகிழ்ச்சியான சூழ்நிலைகள் ..
சாதிக்க கூடிய சூழ்நிலைகள் ..
அற்புதமான சூழ்நிலைகள் ..
துறவிகளுக்கும் .. இல்லறவாசிகளுக்கும் ..
புண்ய ஆன்மாக்களுக்கும் ..
மற்றும் பாவ ஆன்மாக்களுக்கும் ..
வெற்றி, ஒத்துழைப்பு, மகிழ்ச்சி,
பாராட்டு, குழு மனப்பான்மை ..
போன்ற இனிமையான அனுபவங்கள்
அனைத்தையும் அனைவருக்கும்
சமமாக வழங்குகின்றது!

எனவே..
ஓ பூமி கிரகமே..!
உங்களுக்கு வணக்கங்கள்!
உங்களுக்கு மனமார்ந்த நன்றி!

- பிரம்மர்ஷி பத்ரிஜி
நிறுவனர்: பிரமிட் ஆன்மிக மன்ற இயக்கம், இந்தியா



# "தியானத்தின் மூலம் தயார்நிலை வருகிறது"

எத்தனையோ கனவுகள் .. எண்ணற்ற ஆசைகள் ..
சில உடனடியாக நிறைவேறும் ..
சில சரியான நேரம் வரும்பொழுது நிறைவேறும் ..
சில அடுத்த பிறவிகளில் நிறைவேறும் ..
இவை அனைத்தின் பின்னணியில் உள்ள காரணம் ..
உடல், மனம் மற்றும் புத்தியின் தயார்நிலை.

தயார்நிலை என்றால் ..
முழுமையாக தயாராக இருப்பது.
நாம் விரும்பும் அனுபவங்களை ஏற்றுக்கொள்ள ..
உடல் ரீதியாகவும்.. மற்றும் மன ரீதியாகவும் ..
அவை கொண்டு வரும் பலன்களைப் பெறத்
தயாராக இருப்பது!

நமது கனவுகளை நினைவாக்க,
வேலை செய்ய எப்போதும் தயாராக இருப்பது ..
உணவு பற்றாக்குறை மற்றும் தூக்கமின்மையை
எதிர்கொள்ள உடல் ரீதியாக தயாராக இருப்பது ..
கடுமையான அழுத்தங்களை
எதிர்கொள்ள மனதளவில் தயாராக இருப்பது!
அப்போதுதான் நம் கனவுகள் நினைவாகும்!

அதேபோல்,
ஆன்மாவுக்கும் அதன் சொந்த கனவுகள் உள்ளன ..
அதுவே நம் வாழ்க்கையின் குறிக்கோள் ..
அதுவே சிறந்த கனவுகள்..
அதுவே சிறந்த அனுபவங்கள்!
நமது ஆன்ம கனவுகளை நினைவாக்க,
நாம் ஆன்மா நிலையில் தயாராக இருப்பதோடு
உடல், மனம் மற்றும் புத்தி நிலையிலும்
தயாராக இருப்பது!

இந்த மிகப்பெரிய கனவுகள் நினைவாக,
தடைகள் எதுவாக இருந்தாலும்,
நமது ஆன்ம வலிமையுடன்,
முயற்சியைத் தொடர வேண்டும்.
தியானத்தின் மூலம் ஆன்மவலிமை விழிப்படைகிறது!

அதனால்தான்,
தயார்நிலை தியானத்தின் மூலம் வருகிறது
தியானத்தின் மூலம் ..
நம் வாழ்வின் குறிக்கோளை
நாம் நிறைவேற்ற முடியும்.
தியானத்தின் மூலம் ..
நேரடி அனுபவத்தின் மூலம்
ஆன்ம நிலையில் நாம் கற்றுக்கொள்கிறோம்!

தியானத்தின் மூலம் தயார்நிலையைப் பெறுவோம்..
நம் வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றுவோம்!



**பாலாஜி டோன்தி**
மெடிடேஷன் கோச்,
மேனேஜிங் டிரஸ்ட்டி,
சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல்
ஃபவுண்டேஷன்

## நீங்கள் தயாரா?



# “நாம் எப்படி வாழ்கிறோமோ அப்படியே இறக்கிறோம்”

- மனமும் அறிவும் சந்தேகிப்பதை விட புதிய விஷயங்களைக் கண்டுபிடிப்பதில் அதிக ஆர்வத்துடன் இருக்கும்பொழுது மிகப்பெரிய தனிப்பட்ட வளர்ச்சியானது நடைபெறுகின்றது.
- மரணம் ஒவ்வொரு கணமும் நிகழ்கிறது. பிறப்பு மற்றும் இறப்பு என்ற அற்புதமான சுழற்சியில் நாம் வாழ்கிறோம். ஓர் அனுபவத்தின் முடிவு அடுத்த அனுபவத்தின் தொடக்கமாகும், அது விரைவாக அதன் சுய ஆலோசனைக்கு வந்து, ஒரு புதிய தொடக்கத்திற்கு வழிவகுக்கிறது. மரணம் என்பது தொடர்ந்து பாயும் நதி போன்றது.
- நம்மை அல்லது மற்றவர்களை நோக்கி நாம் செலுத்தும் எந்தவொரு நேர்மறையான ஆற்றலும் அன்பு மற்றும் இரக்கத்தின் சூழலை உருவாக்குகிறது, அது உலகில் அலை அலையாக பரவுகிறது. நமது மனநிலை உலகைப் பாதிக்கிறது, அது நம்மைச் சுற்றியுள்ள மக்களைப் பாதிக்கிறது.
- கடந்த காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் இடையில், முன்பு நடந்தவற்றின் நினைவுக்கும், விரைவில் நினைவாக மாறும் நெருங்கி வரும் அனுபவத்திற்கும் இடையில் நாம் எப்போதும் ஒரு இடைநிலையில் இருக்கிறோம்.
- நமது தற்போதைய அனுபவங்கள் அனைத்தும் நமது "கடந்து செல்லும் நினைவுகள்".
- நிரந்தரமற்ற தன்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்க்கையின் நிரந்தரமற்ற தன்மைக்கு தினமும் கொஞ்சம் பழக்கப்படுத்திக் கொள்வது மற்றும் நிரந்தரமற்ற தன்மையின் முழுமையான கருத்தைப் புரிந்து கொள்வதன் மூலம் மரணத்தின் போதும் அதற்குப் பின்னரும் நாம் எளிதாக கடந்து செல்ல உதவுகிறது.
- தியானம் நம் உடலையும், மனதையும் சிறிது நேரம் தாண்டிச் செல்ல உதவுகிறது மற்றும் நிரந்தரமற்ற அனுபவத்தை நமக்கு வழங்குகிறது. நிரந்தரமற்ற தன்மை நமக்குப் பரிச்சயமாகிவிட்டால், மரணத்தின் இறுதி அவ்வளவு அச்சுறுத்தலாகத் தோன்றாது.
- தியானத்தின் முக்கிய நோக்கம், அடர்த்தியான சிந்தனை நிறைந்த அனுபவத்தில் எப்போதும் இடைவெளிகள் இருப்பதைக் கவனிக்கும் அளவுக்கு மெதுவாகச் சென்று, மனதின் கற்பனையற்ற, எண்ணங்கள் அல்லாத இயல்பின் ஒரு பார்வையாக இந்த இடைவெளிகளைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ளத் தொடங்குவதாகும்.
- தியானம் நம் எண்ணங்களைக் கரைத்து, பிறப்புக்கு முன் மற்றும் இறப்புக்குப் பிறகு நாம் நமது பௌதீக உடலில் இருக்கும் பொழுது இருக்கும் நிலையை உணர உதவுகிறது. இதனால் பயமின்றி இறக்கும் அனுபவத்தில் நுழைய நம்மைத் தயார்படுத்துகிறது.
- ஒவ்வொருவரும் "திபெடியன் புக் அஃப் தி டெத்" என்ற புத்தகத்தைப் படிக்க வேண்டும். இறப்புச் செயல்பாட்டின் பொழுது என்ன நடக்கிறது என்பதை அடையாளம் காண இந்த புத்தகம் மக்களைத் தயார்படுத்துகிறது. அதனால், மரணம் தோன்றும் போது அவற்றை அவர்கள் தெளிவாகக் கவனித்து உணர முடியும்.
- நாம் ஒரே மனநிலையுடன் தொடர்கிறோம். மேலும் நாம் பௌதீக வாழ்க்கையை முடித்த பிறகு நமது உணர்ச்சி வடிவங்களை நம்முடன் எடுத்துச் செல்கிறோம். ஏனென்றால் சிரமங்களைக் கடந்து பயணிக்கும் பொழுது, நம் மனம், உணர்ச்சிகள் மற்றும் பழக்கவழக்கங்களுடன் நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதுதான் உண்மையில் முக்கியமானது மற்றும் அவை தான் நம்முடன் இருக்கும்.

- நீங்கள் ஒரு நாள் இறக்கப் போகிறீர்கள் என்பது உறுதி, உங்கள் மனநிலையைத் தவிர வேறு எதையும் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்ல மாட்டீர்கள்.
- நீங்கள் ஒரு அமைதியான மரணத்தைப் பெற விரும்பினால், அது நடப்பதை உறுதி செய்வதற்கான சிறந்த வழி, நீங்கள் உயிருடன் இருக்கும்போது அமைதியான மனதை வளர்த்துக் கொள்வதாகும்.






*- Excerpts from HOW WE LIVE IS HOW WE DIE BY PEMA CHODRON*

*24 ஆகஸ்ட் 2025*

## இசைதியானா யக்னம்-3, செங்கல்பட்டு



### "தியான செங்கல்பட்டு வெற்றி விழா கொண்டாட்டங்கள்"

பிரம்மர்ஷி பத்ரிஜி அவர்களின் நல்லாசிகளுடன், பாலாஜி டோன்தி அவர்களின் முயற்சியால் செங்கல்பட்டில், இந்திரா நாராயணா மஹாலில் "இசை தியான யக்னம்-3", "தியான செங்கல்பட்டு வெற்றி விழா கொண்டாட்டங்கள்", ஆகஸ்ட் 24 ஆம் தேதி 2025 அன்று கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சி 200 க்கும் மேற்பட்ட தியானிகளின் பங்கேற்புடன் வெற்றி பெற்றது.



நிகழ்ச்சி குத்து விளக்கு ஏற்றுதலுடன் தொடங்கப்பட்டது. அதற்கடுத்து ஸ்ரீதேவி இசை அகாடமியிலிருந்து வந்திருந்த குழந்தைகளின் இனிமையான பிரார்த்தனை பாடலுடன் தியானம் தொடங்கப்பட்டது. முனைவர். உபேந்திரா அவர்களின் மிருதங்கம், சுரேஷ்குமார் அவர்களின் வயலின், பிரபாகரன் அவர்களின் புல்லாங்குழல் மற்றும் வெங்கடராமன் அவர்களின் கஞ்சிராவோடு தொடர்ந்து மூன்று மணி நேரம் இடைவிடாத கூட்டுத் தியானம் நடைபெற்றது.



கூட்டுத் தியானம் நிறைவு பெற்றவுடன் முனைவர் உபேந்திரா அவர்கள் "3 மணி நேர இசை தியானம் நம் அனைவருக்கும் மிகப்பெரிய வரம், இதனை நாம் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நான் தினமும் 30 நிமிடங்கள் ஆனாபானசதி தியானம் செய்கிறேன், எனது உடல் நிலை மேம்பட்டுள்ளது. நீங்கள் அனைவரும் தினமும் தியானம் செய்ய வேண்டும் என்று கூறினார்".

சுரேஷ் குமார் அவர்கள் : "தியானத்தின் முக்கியத்துவத்தை நான் இங்கு வந்து தான் உணர்ந்து கொண்டேன். இங்கு நான் மிகவும் மகிழ்ச்சியுடனும், கொண்டாட்டத்துடனும் இசையை வாசித்தேன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது என்று கூறினார்". வெங்கடராமன் : "தியானத்திற்காக இசை வாசிப்பது என்னுடைய முதல் அனுபவம். இங்கு கஞ்சிரா வாசித்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தந்தது. இது எனக்கு ஒரு மறக்க முடியாத தருணம் என்றார்". பிரபாகரன் : "யாருக்கு உடம்பில் நோய் இருந்தாலும் இந்த தியானத்தில் வந்து கலந்து கொண்டால் அவர்கள் ஆரோக்கியமாகி விடுவார்கள் அப்படிப்பட்ட அற்புதமான நிகழ்ச்சி இது என்று கூறினார்.

மூத்த பிரமிடு ஆசான் வி. வி. ஜி ராஜு: "தியான சாதனையில் நமக்கு நிறைய நிகழ்வுகள் வரும். முதலில், ஆசன சித்தி கிடைக்கும். இரண்டாவதாக, அலைந்து திரியும் மனம் அமைதியாகிறது. மூன்றாவதாக, மனம் அமைதி பெற்ற உடன் சூட்சும உடல் செயல்படத் தொடங்குகிறது. நான்காவதாக, விஸ்வ சக்தி நமக்கு உள்ளே செல்லும். ஐந்தாவதாக, நமக்கு முழு ஆரோக்கியம் கிடைக்கும். ஆறாவதாக, மூன்றாவது கண் செயல்படத் தொடங்குகிறது.

இதன் மூலம் வண்ணங்கள், இயற்கை ஆகியவைத் தெரியும் மற்றும் பலவித நல்ல அனுபவங்கள் ஏற்படும். ஏழாவதாக, தெளிவுக்காட்சித் (clairvoyance) தெரியும் மற்றும் தெளிவான குரல் (clairaudience) கேட்கும். எட்டாவதாக, சூட்சும பயணம் செய்வோம். ஒன்பதாவதாக, ஆன்ம ஞானம் கிடைக்கும். பத்தாவதாக, முக்தி கிடைக்கும். இவை அனைத்திற்கும் முதன்மையாக நாம் தியானம் செய்ய வேண்டும் என்று கூறினார்".

மூத்த பிரமிடு ஆசான் வரலட்சுமி ராஜு: "இன்றைக்கு நாம் எவ்வளவு பாக்கியம் செய்துள்ளோம். பத்திரிஜி அவர்கள் எங்கள் வாழ்க்கையில் வந்து எங்களுக்கு தியானம் வழங்கியுள்ளார்கள். இங்கு நல்ல அதிர்வுகள் இருப்பதை நான் உணர்கிறேன், பல சூட்சும குருமார்களை நான் பார்த்தேன். 2000ஆம் ஆண்டில் நான் தியானம் செய்யத் தொடங்கினேன். அந்த நாட்களில், பத்திரிஜி எண்ணற்ற மக்களுக்கு தியானம் கற்பிக்க நடைபயிற்சி, இரு சக்கர வாகனம் அல்லது பேருந்தில் எல்லா இடங்களிலும் பயணம் செய்வார். அவருக்கு எந்த ஒரு பாகுபாடும் கிடையாது. ஆண், பெண், வயதானவர், இளமையானவர் என்று அனைவருக்கும் சொல்லிக் கொடுத்தார். ஒவ்வொரு ஊர்களுக்கும், அனைத்து இடத்திற்கும் சென்று தியானம் சொல்லிக் கொடுத்தார். சிறிய துளிகள் ஒன்றிணைந்து ஒரு சக்தி வாய்ந்த கடலை உருவாக்கியது போல, அவர் உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான தியானிகளை உருவாக்கினார்.



எனவே, ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் தியானம் செய்ய வேண்டும். நீங்கள் ஒரு கல்லை மெருகூட்டும்போது, அது வைரமாக மாறி மதிப்பைப் பெறுகிறது. இதேபோல், தியானத்தின் மூலம் உங்கள் மனதை தூய்மைப்படுத்தும்போது, நீங்கள் தெய்வீகமாக மாறுகிறீர்கள். தியானத்தின் மூலம், மரண பயம் மறைந்துவிடும். பத்திரிஜி எங்களுக்கு மிகப் பெரிய ஞானத்தைக் கொடுத்தார்: நீங்கள் உடல் அல்ல. நீங்கள் இறந்தால், நீங்கள் வேறொரு உலகத்திற்குச் செல்கிறீர்கள் என்றார். இறுதியாக அனைவரும் சைவமாக மாறுவோம், "அஹிம்சா பரமோதர்மஹா" மற்ற உயிர்களுக்கு நாம் இம்சை கொடுக்கக் கூடாது. மனம், வாக்கு, செயல் எந்த விதமாகவும் பிறருக்கு துன்பம் தரக்கூடாது. இதனால் அனைவரும் மகிழ்ச்சியாக வாழலாம்".

பாலாஜி டோன்தி: "மாற்றம் என்பது உள்ளிருந்து வர வேண்டும். நான் மாற வேண்டும் என்று முடிவு எடுத்தால், நான் ஏன் மாற வேண்டும்? என்ற கேள்வி எழுந்தால், நம் குரு நம்மிடம் வருவார். அதற்காக நம்மிடம் நாம் மாற்றம் கொண்டு வர வேண்டும். எண்ணம், சொல், செயல் இவற்றில் விழிப்புணர்வு வரும். ஒரு ஊரில் ஒரு தியான குடும்பம் இருந்தால் அதுவே தியான நகரம் பின்னர் தியான உலகமாக மாறும். தியானம் சொல்லிக் கொடுத்தால் உள் மாற்றம் தானாக வரும் என்று கூறினார்".



சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன் காலாண்டு செய்திமடல் "சத்தியம்" பிரமிட் ஆசான்கள் லலிதா மற்றும் ராமதாஸ் ஆகியோரால் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பேசிய ஸ்ரீநிவாசன், "கடந்த மூன்று மாதங்களாக அறக்கட்டளையின் அனைத்து நடவடிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன. இந்த செய்திமடலில் நான் நிறைய ஆற்றலை உணர்கிறேன். அனைவரும் இதைப் படித்து பயனடைய வேண்டும்" என்றார்.

மதியம் 1 மணிக்கு, அன்னதானம் வழங்கப்பட்டது. தியானம் செய்பவர்கள் அனைவருக்கும் சுவையான உணவு வழங்கப்பட்டது.

மதிய உணவுக்குப் பிறகு, தியானிகள் தங்கள் தியான அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டனர். இது மிகவும் ஊக்கமளிக்கும் மற்றும் அறிவொளி ஊட்டும் வகையில் இருந்தது.







தனசேகரன் : "நான் செங்கல்பட்டைச் சேர்ந்தவன், தினமலரில் வேலை பார்க்கிறேன். முதன் முதலில் நான் ராம்தாஸ் ஐயா வீட்டில் தியானம் செய்தேன். இங்கு இசை தியானம் மிகவும் ஆற்றல் வாய்ந்ததாக இருந்தது. நல்ல உணர்வு எனக்கு கிடைத்தது. உடல் ரீதியாக முன்னேற்றம் உள்ளது. நல்ல அனுபவங்கள் கிடைத்தது. அனைவரும் தியானம் செய்து நல்ல அனுபவத்தை பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்."

கணேஷ் : "நான் தனசேகரன் அவர்களின் நண்பன். என்னுடைய வீடு குழிப்பாந்தண்டலம் என்னும் இடத்தில் உள்ளது. நானும் பத்திரிக்கையில் வேலை பார்க்கிறேன். மக்களை அதிகமாக சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது அதனால் நான் பாலாஜி அவர்களை இங்கு தியானம் சொல்லித் தர அழைத்தேன். அவரும் இந்த ஊரில் தியானம் சொல்லித் தந்தார். தியானத்தில் அமைதியாக உட்காரும் போது இசை மட்டும் தான் கேட்கிறது வேறு எந்த சிந்தனையும் எனக்கு இல்லை. தியானம் மிகவும் அருமையாக இருந்தது. என்னால் முடிந்தவரை எல்லா கிராமத்துக்கும் இந்த தியானத்தை எடுத்துச் செல்ல உதவி செய்கிறேன் பாலாஜி அவர்கள் வந்து சொல்லித் தர வேண்டும் என்று கூறினார்".

ஆனந்த பிரகாஷ் : "நான் சென்னையைச் சேர்ந்தவன், பிரம்மர்ஷி பத்ரிஜிக்கும், பாலாஜி அவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். நான் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் உணவு தயாரித்து அளிப்பவன். எனக்கு மன அமைதிக்கான தேடல் இருந்தது, அப்பொழுது பத்திரிஜி அவர்களின் காணொளிகளை பார்த்தேன். அன்றிலிருந்து அசைவ உணவு சமைப்பதை விட்டு விட்டேன். இப்பொழுது நான் மன அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் இருக்கிறேன். எனக்கு கோபமும் குறைந்திருக்கிறது. முன்பு போக்குவரத்து நெரிசலில் இருக்கும் பொழுது யார் திட்டினாலும் சண்டை போடுவேன் ஆனால் இப்பொழுது சிரித்து விட்டு அமைதியாக இருந்து விடுகிறேன் என்று கூறினார்.



ராஜேஸ்வரி: "நான் சென்னையைச் சேர்ந்தவள். கேசவன் அவர்கள் தியான மையத்திற்கு சென்று தியானம் செய்து வந்தேன். என் மனம் அமைதியாக இருந்தது. வீட்டில் உட்கார்ந்து தியானம் செய்யும் பொழுது சில நாட்கள் எனக்கு தொந்தரவு இருந்தது, அப்பொழுது சில தேவதைகள் எனக்கு பாதுகாப்பு கொடுக்க வந்ததாக கூறினார்கள். இன்று நான் தியானம் செய்யும்பொழுது மனம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நாம் தியானம் செய்தால் நம்மை பற்றி நிறைய தெரிஞ்சுக்கலாம், அதனால் அனைவரும் தியானம் செய்ய வேண்டும் என்று கூறினார்".

சுசீலா : "நான் செங்கல்பட்டைச் சேர்ந்தவள். என் கணவர் தியானம் சொல்லித் தர நான் வீட்டிலிருந்து உதவுகிறேன். இன்று தியானம் செய்யும் பொழுது மனதிற்கு மிகவும் நிம்மதியாக இருந்தது என்று கூறினார்".

பழனி : "நான் ஊரப்பாக்கத்தைச் சேர்ந்தவன். மூச்சு காற்றை கவனிப்பதன் மூலம் என்னால் உயர்ந்த நிலைக்கு செல்ல முடிகிறது. இந்த தியானத்தை கற்றுத்தந்த பத்திரிஜிக்கு நன்றி. நல்ல சக்தி வாய்ந்த ஒருத்தரால் மட்டுமே பிரமிடு தியானம் செய்ய முடியும். இதை எல்லாரும் செய்து பயனடைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று கூறினார்".

தியானம் செய்பவர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட பிறகு, பிரியா விஜய் அவர்கள் பாடல்கள் பாடினார். இதில் பக்தி பாடல்கள் இடம்பெற்றன. அதற்கு உபேந்திரா அவர்கள் மிருதங்கம் வாசித்தார், சுரேஷ் குமார் அவர்கள் வயலின் வாசித்தார். ஒரு பாடலுக்கு சிறு பாலகனான யுக்தேஷ் டோன்தி மிருதங்கம் வாசித்தார்.







கர்நாடக இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து நாட்டிய சாஸ்திர நாட்டியாலயாவிலிருந்து வந்த குழந்தைகள் பரதநாட்டியம் ஆடினர் மிகவும் அற்புதமாக இருந்தது. ஆடல், பாடல் கொண்டாட்டத்துடன் "இசை தியான யக்னம்-3", "தியான செங்கல்பட்டு வெற்றி விழா கொண்டாட்டங்கள்" நிறைவடைந்தது. லதா சந்திரசேகர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

இறுதியாக மாலைப்பொழுதில் தியானிகளுக்கு சுவையான தேநீர் வழங்குதலுடன், நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

## "ஃபவுண்டேஷன் செயல்பாடுகள்"

சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன் அனைவருக்கும் தியானம் கட்டணமின்றி கற்றுத்தருகின்றது. தற்போது, ஃபவுண்டேஷன் செங்கல்பட்டு மாவட்டத்தில் அதன் செயல்பாடுகளில் கவனம் செலுத்தி வருகிறது. வாராந்திர வகுப்புகள், பொது நிகழ்வுகள் மற்றும் ஆன்மிக நிகழ்ச்சிகள் மூலம், சமூகத்தில் உள் அமைதி மற்றும் விழிப்புணர்வை நாங்கள் வளர்த்து வருகிறோம். சுய உணர்தல் மற்றும் சேவையில் வேரூன்றிய ஆன்மிக விழிப்படைந்த சமூகத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கம்.

## 2025 ஜூலை முதல் செப்டம்பர் வரை நடத்தப்பட்ட செயல்பாடுகள் செங்கல்பட்டு, போகர் பிரமிட் தியான மையத்தில்:

### சத்ய தரிசனம் *(33-க்கும் மேற்பட்ட வகுப்புகள் நிறைவடைந்தன)*






"சத்ய தரிசனம்" என்பது 90 நிமிட ஆழ்ந்த தியானம் மற்றும் 60 நிமிட சத்சங்கத்துடன் வடிவமைக்கப்பட்ட ஒரு தனித்துவமான திட்டமாகும், இது பங்கேற்பாளர்களுக்கு தியானப் பயிற்சி மற்றும் ஞானப் பகிர்வின் வளமான அனுபவத்தை வழங்குகிறது. இதுவரை, அறக்கட்டளை, செங்கல்பட்டில் உள்ள போகர் பிரமிட் தியான மையத்தில் 33 க்கும் மேற்பட்ட வகுப்புகளை முடித்துள்ளது. ஒவ்வொரு சத்ய தரிசன வகுப்பு இறுதியிலும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த காலகட்டத்தில் வகுப்புகள் பாலாஜி டோன்தி, டாக்டர் வி.வரலட்சுமி, எஸ்.ரேவதி மற்றும் ஆர்.ஸ்ரீனிவாசன் ஆகியோரால் நடத்தப்பட்டது.

### பௌர்ணமி தியான வகுப்புகள்

பௌர்ணமி என்பது ஆன்மிக ஆற்றல்கள் உச்சத்தில் இருக்கும் ஒரு சக்திவாய்ந்த நேரம். அந்நாளில் தியானம் மிகவும் ஆழமாகவும் மற்றும் உள் மாற்றங்கள் நிகழ்வதாகவும் அமைகின்றது. பௌர்ணமி நாளில் தியானம் செய்வது மனதை சுத்தப்படுத்தவும், நோக்கங்களை வலிமையாக்கவும், உயர்ந்த உணர்வுடன் இணைக்கவும் உதவுகிறது. ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2025 இல், பாலாஜி டோன்தி, லலிதா ராமதாஸ் மற்றும் ஆர். ஸ்ரீனிவாசன் ஆகியோர் சிறப்பு பௌர்ணமி தியான வகுப்புகளுக்கு தலைமை தாங்கினர், ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு மணி நேரம் ஆழ்ந்த தியானமும் தொடர்ந்து சத்சங்கமும் நடைபெற்றன.

பங்கேற்பாளர்கள் உள் அமைதி, தெளிவு மற்றும் ஆன்மிக முன்னேற்றம் போன்ற அனுபவங்களைப் பெற்றார். ஒவ்வொரு வகுப்பும் அன்னதானத்துடன் முடிவடைந்தது.






## SJK நர்சரி & பிரைமரி ஸ்கூல்லில் தியான வகுப்புகள்

தியான பயிற்சியாளர் பாலாஜி டோன்தி மற்றும் ஆர். ஸ்ரீனிவாசன் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன் சார்பில், 2025 ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் 7 நாள் தியானப் பயிற்சித் திட்டத்தை சாலவாக்கத்தில் உள்ள SJK நர்சரி & பிரைமரி ஸ்கூல்லில் 4 முதல் 6 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்பட்டன.

ஒவ்வொரு நாளும் 85க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று, தியானத்தின் சக்தியை அனுபவித்து, இளம் வயதிலேயே அமைதி, கவனம் மற்றும் உணர்வுகளின் சமநிலையை எவ்வாறு வளர்ப்பது என்பதைக் கற்றுக்கொண்டனர்.

ஒவ்வொரு வகுப்பும் எளிய ஆனாபானசதி தியானப் பயிற்சியுடன், ஏழு நாட்களும் ஒவ்வொரு சிறந்த ஆன்மிக தலைப்புகளில் தொடங்கப்பட்டது. இந்த தலைப்புகள் குழந்தைகளுக்கு நடைமுறை ஞானத்தை மேம்படுத்தவும், பொது அறிவை வலுப்படுத்தவும், தங்களை அவர்களின் குடும்பம் மற்றும் சமூகம் மீதான பொறுப்புகளைப் புரிந்து கொள்ளவும் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.








குழந்தைகள் ஆரோக்கியம், நல்ல பழக்கவழக்கங்கள், ஒழுக்கம், நன்றியுணர்வு, கருணை, உணர்ச்சியின் விழிப்புணர்வு மற்றும் கவனமுள்ள வாழ்க்கை தொடர்பான கருத்துகளில் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டனர்.

7வது நாளில், மாணவர்கள் நிகழ்ச்சி முழுவதும் தாங்கள் கற்றுக்கொண்டதைப் பற்றி சிந்திக்க ஒரு குறுகிய மற்றும் சுவாரஸ்யமான மதிப்பீட்டை மேற்கொண்டனர். அவர்களின் பதில்கள், வகுப்புகளுடன் அவர்கள் எவ்வளவு ஆழமாக இணைந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டின.

ஆசிரியர் தினத்தன்று அந்நிகழ்ச்சி ஓர் அர்த்தமுள்ளதாக நிறைவடைந்தது. இதில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி நிறைவு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, தியானத்திற்கான அவர்களின் பங்கேற்பு மற்றும் அர்ப்பணிப்பு கொண்டாடப்பட்டது.

சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன் மூலமாக பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் ஆதரவிற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. இளம் மனங்களை வளர்க்கும் மற்றும் அமைதியான, விழிப்புடைய எதிர்கால தலைமுறையை உருவாக்கும் இதுபோன்று இன்னும் பல முயற்சிகளை நடத்த அறக்கட்டளை எதிர்நோக்குகிறது.

## தியான சப்தாஹம்

சத்யம் பிரமிட் ஆன்மிக அறக்கட்டளை செங்கல்பட்டு மற்றும் அதைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களில் நடைபெற்ற (ஏழு நாள் தியான வகுப்புகளான) "தியான சப்தாஹம்" வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்த எழுச்சியூட்டும் நிகழ்ச்சிகள் பெருங்களத்தூர், ஊரப்பாக்கம், தாம்பரம், செங்கல்பட்டு, குழிப்பாந்தண்டலம் மற்றும் செம்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள அர்ப்பணிப்புள்ள பிரமிட் ஆசான்களின் வீடுகளில் நடத்தப்பட்டன. இதில் பங்கேற்ற அனைவருக்கும் ஓர் அன்பான மற்றும் புனிதமான சூழ்நிலையை உருவாக்கியது.



ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் 30 நிமிட ஆழ்ந்த தியானம், அதைத் தொடர்ந்து 30 நிமிட வளப்படுத்தும் ஆன்மிக சத்சங்கம் ஆகியவை இடம்பெற்றன, அங்கு அனுபவ அறிவு, வாழ்க்கைப் பாடங்கள் மற்றும் தியானக் கருத்துக்கள் பங்கேற்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

வி.வி.ஜி. ராஜு, ஆர். ஸ்ரீனிவாசன், பாலாஜி டோன்தி, லலிதா ராமதாஸ், என். எஸ். லட்சுமி, உள்ளிட்ட அனுபவம் வாய்ந்த ஆசான்களால் வகுப்புகள் வழிநடத்தப்பட்டன. ஒவ்வொருவரும் தங்கள் தனித்துவமான ஆற்றலையும், ஞானத்தையும் கூடி இருந்தோருக்குக் கொண்டு வந்தனர். பங்கேற்பாளர்களிடமிருந்து வந்த ஒட்டுமொத்த பதில் மிகவும் நேர்மறையானதாக இருந்தது. ஒவ்வொரு வகுப்புக்குப் பிறகும் பலர் ஆழ்ந்த உள் அமைதியையும், தெளிவையும் வெளிப்படுத்தினர். ஒவ்வொரு இடத்திலும், “இசை தியான யக்னம்-3” பற்றிய விழிப்புணர்வு ஊக்குவிக்கப்பட்டது, மேலும் தியானம், சைவ உணவு மற்றும் ஆன்மிக அறிவியலைப் பரப்பும் பணியில் சேர அதிகமான மக்களை ஊக்குவிக்க துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

அன்பு மற்றும் நன்றியுணர்வின் வெளிப்பாடாக, வகுப்புகளை நடத்திய பிரமிட் மாஸ்டர்கள் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் சுவையான உணவை வழங்கினர். ஒவ்வொரு கூட்டத்தையும் தியானம், கற்றல் மற்றும் சமூக பிணைப்பின் அழகான கலவையாக மாற்றினர்.

"தியான சப்தாஹம்" கூட்டு தியானம் எவ்வாறு முழு சமூகத்தை உயர்த்த முடியும் என்பதற்கும், அன்றாட வாழ்க்கையில் நல்லிணக்கம், மகிழ்ச்சி மற்றும் ஆன்மிக வலிமையைக் கொண்டுவருவதற்கும் ஒரு சான்றாக நிற்கிறது.

SATYAM eSTORE

**Energise Your Space .. Elevate your Life!**

**Pyramids | Crystals | Spiritual Books**

Welcome to Satyam eStore, your premier destination for high-quality handcrafted meditation pyramids.

At Satyam eStore, we are specialized in creating life-transforming sacred geometric tools that promote better health, elevate consciousness, reduce stress, manifest intentions, enhance intuition, and clear emotional and electromagnetic interferences. Discover the power of these spiritual tools and experience profound spiritual growth.












To buy pyramids, crystals and spiritual books
visit : www.satyamestore.in or whatsapp +91 9994005244

# தியான அனுபவங்கள்



என் பெயர் மாலதி. நான் கோகுலாபுரத்தில் இருந்து வருகிறேன். எனக்கு முதுகு வலி மிகவும் அதிகமாக இருந்தது. உட்காரவே முடியாது. இப்பொழுது ஒரு மணி நேரம் உட்காருகிறேன். இந்த தியானத்திற்கு வந்த பிறகு உடம்பு மிகவும் நன்றாக இருக்கிறது. மனம் ரொம்ப நிம்மதியாக இருக்கிறது. இப்பொழுது அனைத்தும் நன்றாக போகிறது, மிகவும் நன்றாக இருக்கிறேன். எல்லோரும் என்னை மாதிரி தியானம் பண்ணி பயனடையுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

- மாலதி ரமேஷ், செங்கல்பட்டு



என் பெயர் ஜெயந்தி. நான் செங்கல்பட்டில் வேதாச்சலம் நகரில் இருக்கிறேன். நான் இந்த தியானத்திற்கு வந்து ஒன்றரை மாதம் ஆகிறது. இப்பொழுது நான் மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறேன். இப்பொழுது எங்கள் வீட்டு வேலையெல்லாம் நன்றாக செய்ய முடிகிறது. இதற்கு முன்பு என் கணவர் தியானத்திற்கெல்லாம் போகக்கூடாது என்று கூறுவார்.

மருந்து தான் எடுத்து கொள்ள வேண்டும் என்று கூறுவார். இப்பொழுது என் கணவரே என்னை தியானத்திற்கு போ என்று சொல்கிறார். இந்த தியானம் செய்தால் உடம்பு மிகவும் நன்றாக இருக்கிறது. மனதும் ரொம்ப அமைதியாக இருக்கிறது. சரியான முடிவு எடுக்க முடிகிறது. ஆதலால் எல்லோரும் இந்த தியானம் செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- ஜெயந்தி, செங்கல்பட்டு



என் பெயர் சுதாகர். இந்த தியானத்திற்கு நான் ஒரு வாரமாக வந்து கொண்டிருக்கிறேன். இப்பொழுது மனது நல்ல அமைதியாக இருக்கிறது. மிகவும் தெளிவாக இருக்கிறேன். இந்த தியானத்திற்கு வந்ததால் என்னால் நல்ல முடிவு எடுக்க முடிகிறது. என் அம்மாவுக்கும் மனது ரொம்ப தெளிவாக இருக்கிறது.

இந்த தியானத்திற்கு வந்ததால் நாங்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம். மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறோம்.

எங்களை மாதிரி சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு எல்லோரும் தியானம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

- சுதாகர், செங்கல்பட்டு



என் பெயர் ரேவதி, நான் தாம்பரத்தில் வசிக்கிறேன். முதலாவதாக, பிரம்மர்ஷி பிதாமஹா பத்திரிஜி மற்றும் மூத்த பிரமிடு ஆசான் திரு. பாலாஜி டோன்தி ஆகியோருக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். செங்கல்பட்டில் உள்ள போகர் பிரமிடு தியான மையத்திற்கு தியானத்திற்காக நான் அடிக்கடி செல்வேன். இங்கு எனக்கு ஆழ்ந்த மாற்றம் ஏற்பட்டது. போகர் பிரமிடு தியான மையத்தில் ஆன்மிக வகுப்புகள் எடுக்கவும் எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

நான் *2023* ஆம் ஆண்டில் எனது தியானப் பயணத்தைத் தொடங்கினேன். ஆனாபானசதி தியானம் மூலம், அசைவ உணவு முறையிலிருந்து சைவ உணவுக்கு என்னால் மாற முடிந்தது. தியானம் என் கோபத்தையும், பேச்சையும் கட்டுப்படுத்த எனக்கு உதவியது.

போகர் பிரமிடு தியான மையத்தில் வகுப்புகளை நடத்திய பிறகு, எனது வாழ்க்கையின் குறிக்கோள் குறித்து இப்போது தெளிவாக உணர்கிறேன். எனது ஆன்மிக வாழ்க்கையிலும், பௌதீக வாழ்க்கையிலும் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். அனைவரும் செங்கல்பட்டில் உள்ள போகர் பிரமிடு தியான மையத்திற்குச் சென்று மகிழ்ச்சியான வாழ்க்கைக்காக தியானம் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். - ரேவதி, தாம்பரம்

எங்கள் வாராந்திர தியானம் மற்றும் சத்சங்கத்தில் கலந்து கொள்ளுங்கள்,
செங்கல்பட்டில் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 10:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை "சத்தியதரிசன வகுப்புகள்" நடத்தப்படுகின்றன.
நுழைவுக் கட்டணம் இல்லை. இந்தஆன்மிக வகுப்புகளில் பங்கேற்று பயனடைய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன் பற்றிய விவரம் :

சத்தியம் பிரமிட் ஸ்பிரிச்சுவல் ஃபவுண்டேஷன் பிரம்மரிஷி பத்ர்ஜியின் உத்வேகத்தால் நிறுவப்பட்டது. இந்த அறக்கட்டளை தியானம், அறிவியல் ஆன்மிகம், பிரமிட் சக்தியின் விழிப்புணர்வு ஆகியவற்றை பரப்புவதற்காக அர்ப்பணிக்கப்பட்டது. எந்த கட்டணமும் இல்லாமல் ஒவ்வொருவருக்கும் தியானம் கற்பித்தல், தியான சக்தியை அதிகரிப்பதற்கு பிரமிட் கட்டுவதின் அவசியம் பற்றி விழிப்புணர்வு உருவாக்குதல், பிரமிட் ஆசிரமங்களுக்கு இலவச தியான நிகழ்ச்சி நடத்துவதற்கு உதவுதல், ஆன்மிகப் புத்தகங்கள் வெளியிடுதல், ஆன்மிகத் தேடல் உள்ளவர்களுக்கு ஆன்மிகப் புத்தகத்தின் பயனை இலவசமாக அளித்தல் இதுவே எங்கள் பணியாகும்.

சுறுசுறுப்பான, புத்திக்கூர்மையான வாழ்க்கை வாழ சைவ உணவுதான் சிறந்தது, எனவே நாங்கள் தியானிகளுக்கும், யோகிகளுக்கும் அன்னதான சேவை செய்வதற்கு ஊக்குவிக்கின்றோம். இதன் மூலமாக இணக்கமான, விழிப்புணர்வோடு கூடிய தனி நபர் மாற்றத்தை உருவாக்கி, அதன்மூலம் உலகளாவிய சுய மாற்றத்தை உருவாக்க நாங்கள் பாடுபடுகிறோம். இந்த ஆன்மிக அறக்கட்டளையில் எங்களுடன் இணையுங்கள். தியானம் செய்து, விழிப்புணர்வு பெற்று, அனைவரும் இணைந்து சிறந்த பூமியை உருவாக்குவோமாக!

## அன்னதானம் ஒரு புனிதமான செயல்

நமது பண்டைய மரபுகளின்படி, அன்னதானம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, குறிப்பாக ஆன்மிக ஆர்வலர்கள் மற்றும் அருட்தொண்டர்களுக்கு. அன்னதானத்துடன், தியான தானம், சேவை தானம் மற்றும் ஞான தானம் போன்ற அனைத்து செயல்களும் மிகவும் சிறந்தவையாகும்.
தானங்களில் சிறந்த தானம் அன்னதானம்!
அன்னதானம் என்பது நன்கொடைக்கான தூய்மையான வடிவமாகும்!



*"Consciousness is the fundamental verity.
Thought is a function of consciousness.
Energy is the product of thought.
And, finally, matter is the crystallization of energy."*
*– Brahmarshi Patriji*

இலவச தியான வகுப்புக்கு
**போகர் பிரமிடு தியான மையம்,**
31/A, கவுன்சிலர் தேவராஜனார் தெரு, வேதாச்சலம் நகர்,
செங்கல்பட்டு-603001 | வருகை நேரம்: 6am-8am & 5pm-7pm
தொலைபேசி : 9176500063, 8122828800

Buy Pyramids, Crystals and Spiritual Books online at
**Satyam eStore - www.satyamestore.com**
Read all books written by Patriji online today !
buy your annual membership today !
Phone : 9994005244